செ.வெ.எண்: 68 நாள்:25.02.2017

**நெடுவாசல் கிராமத்தில் ஹைட்ரோகார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிடும் வகையில் தமிழகஅரசின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், நெடுவாசல் கிராமத்தில் ஹைட்ரோகார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிடக்கோரி போராட்டம் நடத்தி வரும் ஊர்ப்பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் மற்றும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.செந்தில்நாதன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (25.02.2017) நேரில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஊர்ப்பொதுமக்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்த பின்பு பேசியதாவது:

நமது மாவட்டத்திலுள்ள நெடுவாசல் கிராமத்தில் ஹைட்ரோ கார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் நெடுவாசல் கிராமத்தில் விவசாயம் பாதிக்கப்படும் என்று ஊர்ப்பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு தரப்பினரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இவ்வாறு நெடுவாசல் கிராமத்தில் போராட்டம் நடத்தி வருபவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி போராட்டக்குழு பிரதிநிதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் அழைத்து சென்று தங்களது கோரிக்கையினை தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் நெடுவாசல் கிராமத்தில் ஹைட்ரோ கார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிடக்கோரி மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள். இதன் மூலம் மத்திய அரசிற்கு தமிழக அரசின் மூலம் இத்திட்டத்தை கைவிட உரிய அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.துரை.தனசேகரன், ஆலங்குடி வட்டாட்சியர் திருமதி.ராஜேஸ்வரி, விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.